தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண். 30/பேரூ/2022

நாள் 27.04.2022

திரு. K. ஈஸ்வரன்,
கோம்பை, தேனி மாவட்டம் ... முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
கோம்பை பேரூராட்சி, தேனி மாவட்டம் ... எதிர்மனுதாரர்

தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டம், மெயின் ரோடு, கோம்பையில் உள்ள தேவேந்திரகுல வேளாளர் முன்னேற்ற சங்கத்தின் தலைவர் திரு. K. ஈஸ்வரன் என்பவரது 11.03.2022 நாளிட்ட புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தில் 14.03.2022ல் பெறப்பட்டு, 30/2022என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டம், மெயின் ரோடு, கோம்பையில் உள்ள தேவேந்திரகுல வேளாளர் முன்னேற்ற சங்கத்தின் தலைவர் திரு. K. ஈஸ்வரன் என்பவர் தமது புகார் மனுவில் கோம்பை பேரூராட்சியில் 15–வது வார்டு அருகில் மூன்று நியாயவிலைக் கடைகள் உள்ளன என்றும், தினம்தோறும் 300–க்கு மேற்பட்ட மக்கள் பொருட்கள் வாங்க வருகிறார்களென்றும், கடையின் அருகிலுள்ள இடத்தை சுத்தம் செய்யாமல் மழைநீர் தேங்கியும் முட்புதர்களாக உள்ளதால், மக்களுக்கு நோய் தொற்று ஏற்படும் நிலை உள்ளதென்றும், அதை சரிசெய்யாமல் செயல் அலுவலர் மெத்தனமாக இருந்து வருகிறார் என்றும் குறிப்பிட்டுள்ளார். மேலும் கோம்பை பேரூராட்சியைச் சுற்றியும் கழிவுநீர் சாலையில் சென்று பேரூராட்சியைச் சுற்றியுள்ள மக்களுக்கு சுகாதார கேடு விளைவிக்க முழு காரணமாக செயல் அலுவலர் இருந்துவருகிறார் என்றும், 15–வது வார்டிலுள்ள தேவேந்திர குல வேளாளர் சமுதாய பொதுமக்கள் சுமார் 350 ஆண்டுகளாக

முறைப்படி சொத்துவரி செலுத்தி ஆண்டு அனுபவித்துவரும் "தேவேந்திர குல வேளாளர் சமுதாய இடத்தின்" பிரச்சனையை மாவட்ட ஆட்சியர் விசாரணை நடத்தும் வரை எந்தவொரு செயலும் செய்யமாட்டோம் என்று சொல்லிவிட்டு எதிர்வாதியிடம் பணத்தை பெற்றுக்கொண்டு சுத்தமாக உள்ள தேவேந்திர குல வேளாளர் முறைப்படி சொத்துவரி கட்டி ஆண்டு அனுபவித்து வரும் சமுதாய இடத்தை டெங்கு பரவ நீர் தேங்கியுள்ள இடம் என்று பொய்யான தகவலை கடந்த 20.10.2021 அன்று வருவாய் கோட்டாட்சியர் அவர்களுக்கு அறிக்கை அனுப்பியுள்ளார் என்றும் குற்றம் சாட்டியுள்ளார். மேலும், திரு. சோமசுந்தரம் கோம்பை பேரூராட்சியில் செயல் அலுவலராக பணியில் சேர்ந்து 37 நாட்களே ஆன நிலையில் தஞ்சாவூருக்கு பணியிட மாறுதல் பெற்றுள்ளார் என்றும், அவர் பணியிடமாறுதலில் செல்வதற்கு பணம் கொடுத்துள்ளாரா இல்லை முறைப்படியான பணியிடை மாறுதலா என விசாரணை நடத்தி அவர் மீது நடவடிக்கை எடுக்குமாறும் கோரி இம்முறைமன்ற நடுவத்திற்கு புகார் மனு அளித்துள்ளார்.

மேலும், பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், தேனி மண்டலம், தேனிக்கு 24.10.2021 நாளிட்டு அனுப்பிய புகாரின் நகல், புகைப்பட நகல்கள், தேவேந்திரகுல வேளாளர் சங்கம் சார்பில் கோம்பை தேர்வுநிலை பேரூராட்சியில் செலுத்தப்பட்ட சொத்துவரி ரசீதின் நகல்கள், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்கு 18.3.2021ல் செலுத்தப்பட்ட மின் கட்டண ரசீது நகல் மற்றும் கோம்பை தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர், வருவாய் கோட்டாட்சியர், உத்தமபாளையத்திற்கு 20.10.2021-ல் அனுப்பியுள்ள கடிதத்தின் நகல் ஆகியவற்றை மனுதாரர் தனது புகாருக்கான ஆதார ஆவணங்களாக இம்முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பிவைத்துள்ளார்.

2. மனுதாரரது புகார் மனு மீது கோம்பை தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் அளித்துள்ள 30.03.2022 நாளிட்ட விளக்க அறிக்கையில் கோம்பை பேரூராட்சிக்குட்பட்ட சர்வே எண்.3693/62 நத்தம் காலியிடம் 0.03.06 ஹெக்டேரில் மேற்குபுறம் (3 x 6.6) ச.மீ கான்கிரீட் கட்டிடம், கிழக்குபுறம் (14 x 12) ச.மீ தகர மேற்கூரை, வடபுறம் (17.6 x 11.2) ச.மீ காலியிடம் திரு. ராஜூ என்பவரால் கம்பிவேலி அமைத்து ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்து, மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் திரு. வேல்முருகன் என்பவரால் W.P.(MD) No.10504 of 2021 என்ற வழக்கு தாக்கல் செய்யப்பட்டதில் மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையினால் பிறப்பிக்கப்பட்டுள்ள 24.6.2021 நாளிட்ட தீர்ப்பில் பின்வருமாறு ஆணையிடப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்:-

> "3. It is made clear that there should be little tolerance for encroachments on any Government land and waterbodies and all revenue officials should be vigilant and ensure that Government land is not squatted or encroached on.
>
> 4. This Writ petition is disposed of without notice to the eighth respondent, said to be an encroacher, since the respondent authorities should afford an opportunity of hearing to the eighth respondent before directing his removal"

3. மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளைத் தீர்ப்பின் அடிப்படையில் சர்ச்சைக்குரிய கட்டிடம் தவிர இதர காலியிட பகுதியில் அடிப்படை வசதிகள் செய்ய ஏதுவாக முன்நுழைவு அனுமதி வழங்கிடுமாறு உத்தமபாளையம் வருவாய் கோட்டாட்சியர் அவர்களுக்கு 20.10.2021ல் கோம்பை பேரூராட்சி செயல் அலுவலர் கடிதம் எழுதியுள்ளார். அதன் நகலினையும் கோம்பை பேரூராட்சி செயல் அலுவலர் தமது அறிக்கையுடன் இம்முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பித்துள்ளார். மேலும், மனுதாரரால் தெரிவிக்கப்பட்டுள்ள நியாயவிலைக் கடை அமைந்துள்ள இடம் பண்ணைப்புரம் பேரூராட்சி எல்லைக்குட்பட்டது. முட்புதர்கள் மற்றும் தண்ணீர் தேங்கியுள்ள இடம் கூட்டுறவு சொசைட்டிக்குச் சொந்தமான இடமாகும். வடிகால் அமைந்துள்ள பகுதி பண்ணைப்புரம் பேரூராட்சி எல்லைகுட்பட்ட பகுதியாக இருந்தாலும், பொதுமக்கள் அதிகம் கூடும் இடமாக இருப்பதால், கோம்பை பேரூராட்சி தூய்மைப் பணியாளர்களைக் கொண்டு தொற்றுநோய்கள் பரவாமல் இருக்க கிருமி நாசினி மருந்துகள் தெளிக்கப்பட்டு, வடிகால் சுத்தம் செய்யப்படுகிறது என்று கோம்பை பேரூராட்சி செயல் அலுவலர் தெரிவித்துள்ளார். மேலும், ஆக்கிரமிப்பை அகற்றுவதற்கு நேரில் ஆய்வு செய்தபோது 15வது வார்டு தேவேந்திரகுல வேளாளர் சமுதாய பொது மக்களால் சொத்துவரி செலுத்திவரும் கட்டிட பகுதியில் மழைநீர் ஏதும் தற்சமயம் தேங்கவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

4. முறையீட்டு மனுதாரர் மற்றும் கோம்பை பேரூராட்சி செயல் அலுவலர் ஆகியோர் 13.4.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகுமாறு கோரி இம்முறைமன்ற நடுவ 16.3.2022 நாளிட்ட அழைப்பாணைகள் ஒப்புகையுடன் கூடிய பதிவு அஞ்சல் மூலமாக அனுப்பிவைக்கப்பட்டன. பின்னர் நிர்வாக காரணங்களினால், மேற்படி விசாரணை 19.4.2022 அன்று எடுத்துக்கொள்ள உத்தேசிக்கப்பட்டு, மனுதாரர் மற்றும் செயல் அலுவலர் ஆகியோருக்கு தகவலும் தெரிவிக்கப்பட்டது. அதனடிப்படையில், 19.4.2022 அன்றைய நேரடி விசாரணையில் மனுதாரர் மற்றும் கோம்பை பேரூராட்சி செயல் அலுவலர் ஆகியோர் ஆஜராகி வாக்குமூலமளித்துள்ளனர்.

5. மனுதாரர் திரு. K. ஈஸ்வரன் 19.4.2022 நாளிட்ட நேரடி விசாரணையில் ஆஜராகி அளித்துள்ள தமது வாக்குமூலத்தில் “தேனி மாவட்டம், உத்தமபாளையம் வார்டு எண்.15ல் உள்ள நியாயவிலைக் கடைகளின் அருகே முட்புதர்கள் சூழ்ந்து அங்கு கழிவு நீர் தேங்கியுள்ளது. அதேபோன்று பேரூராட்சியைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் கழிவுநீர் ரோட்டில்தேங்கியுள்ளன. அதனை பேரூராட்சி சுகாதார அலுவலர்கள் முறையாக சுத்தம் செய்யாததன் காரணமாகவும், கொசு மருந்து அடிக்காமலும் பேரூராட்சி அலுவலர்கள் மெத்தனமாக இருந்து வருவதாலும், அங்கு சுகாதார சீர்கேடு ஏற்பட்டு மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகின்றனர். இதற்குக் காரணம் பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் சுகாதாரப் பணியாளர்களாவர். எனவே, மேற்கண்ட பகுதியில் ஏற்படும் சுகாதார சீர்கேட்டிற்குக் காரணமான பேரூராட்சி அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுத்திடவும், மேற்கண்ட பகுதியில் சுகாதார சீர்கேடு ஏற்படாவண்ணம் அடிக்கடி அப்பகுதியை சுத்தம் செய்திடவும், அப்பகுதியில் தேங்கும் நீரில் உள்ள கொசுக்களை ஒழித்திட கொசு மருந்து அடித்திடவும் உரிய நடவடிக்கை எடுத்திடுமாறும் இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், 15வது வார்டில் உள்ள தேவேந்திரகுல வேளாளர் சமுதாய பொதுமக்கள் சுமார் 350 ஆண்டுகளாக முறைப்படி சொத்துவரி செலுத்தி ஆண்டு அனுபவித்துவரும் தேவேந்திர குல வேளாளர் சமுதாய இடத்தின் பிரச்சனையை மாவட்ட ஆட்சியர் அவர்கள் விசாரணை நடத்தும்வரை எந்தவொரு செயலும் செய்யமாட்டோம் என்று சொல்லிவிட்டு, எதிர்வாதியிடம் பணத்தைப் பெற்றுக்கொண்டு சுத்தமாக உள்ள தேவேந்திர குல வேளாளர் முறைப்படி சொத்துவரி கட்டி ஆண்டு அனுபவித்துவரும் சமுதாய இடத்தை டெங்கு பரவ நீர்தேங்கியுள்ள இடம் என்று பொய்யான தகவலை வருவாய் கோட்டாட்சியர் அவர்களுக்கு திரு. சோமசுந்தரம், செயல் அலுவலர் ரிப்போர்ட் அனுப்பியுள்ளார். எனவே, பொய்யான தகவல் வழங்கிய திரு. சோமசுந்தரம், செயல் அலுவலர் மீது தக்க ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

6. கோம்பை பேரூராட்சி செயல் அலுவலர் 19.4.2022 நாளிட்ட நேரடி விசாரணையில் ஆஜராகி அளித்துள்ள தமது வாக்குமூலத்தில் "மனுதாரர் தனது புகார் மனுவில் குறிப்பிட்டுள்ள பகுதி, கோம்பை பேரூராட்சி அருகிலுள்ள பண்ணைபுரம் பேரூராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியாகும். எனினும், பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் உத்தரவின்படி மேற்கண்ட பொதுமக்கள் கூடும் வடிகால் இடத்தை கோம்பை பேரூராட்சி சுகாதாரம் மற்றும் தூய்மைப் பணியாளர்களால் சுத்தம் செய்து, கொசு மருந்து மற்றும் கிருமி நாசினி தெளித்தும் சுத்தம் செய்யப்பட்டு வருகிறது. எனவே, மேற்கண்ட பகுதியில் தற்போது தண்ணீர் தேங்கவில்லை என்பதையும், சுகாதார சீர்கேடு ஏதும் நிலவவில்லை எனவும் இம்முமுறமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

7. மனுதாரரின் புகார் மனு மற்றும் மனுவுடன் இணைத்தனுப்பப்பட்ட ஆவணங்கள்/புகைப்படங்கள், சொத்துவரி ரசீதுகள், கோம்பை தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலரது வாக்குமூலம் மற்றும் விளக்க அறிக்கை மற்றும் அதனுடன் இணைத்தனுப்பப்பட்ட ஆவணங்கள், மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையினால் பிறப்பிக்கப்பட்ட 24.6.2021 நாளிட்ட ஆணையின் நகல் ஆகிய அனைத்தும் இம்முறைமன்ற நடுவத்தினால் மிகக் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:-

- மனுதாரால் அளிக்கப்பட்டுள்ள புகார் மனு 24.10.2021 நாளிட்டு பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், தேனி அவர்களுக்கு அளிக்கப்பட்ட புகார் மனுவின் நகலாகும். மேற்படி புகார் மனுவில் 15வது வார்டு அருகில் உள்ள மூன்று நியாயவிலைக்கடைக்கு தினம்தோறும் 300 மேற்பட்ட மக்கள் வந்துசெல்கின்றனர் என்றும், கடையின் அருகிலுள்ள இடத்தைச் சுத்தம் செய்யாமல், மழைநீர் தேங்கியும் முட்புதர்களாகவும், மக்களுக்கு நோய் தொற்றுவரும் நிலையில் உள்ளதாகவும், அதை சரிசெய்யாமல் கோம்பை பேரூராட்சி செயல் அலுவலர் மெத்தனமாக இருந்து வருகிறார் என்று குறிப்பிட்டுள்ளார். மேலும் கோம்பை பேரூராட்சியைச் சுற்றிலும் கழிவுநீர் சாலையில் சென்று பகுதி மக்களுக்கு சுகாதார கேடு விளைவிக்க முழு காரணமாக செயல் அலுவலர் இருந்துவருகிறார் என்றும், தேவேந்திர குல வேளாளர் சமுதாய பொதுமக்கள் சுமார் 350 ஆண்டுகளாக முறைப்படி சொத்துவரி செலுத்தி

ஆண்டு அனுபவித்துவரும் தேவேந்திரகுல வேளாளர் சமுதாய இடத்தை டெங்கு பரவ நீர் தேங்கியுள்ள இடம் என்று பொய்யான தகவலை 20.10.2021 அன்று வருவாய் கோட்டாட்சியர் அவர்களுக்கு அறிக்கை அனுப்பியுள்ளார் என்றும், செயல் அலுவலர் திரு. சோமசுந்தரம் கோம்பை பேரூராட்சியில் செயல் அலுவலராக பணியில் சேர்ந்து 37 நாட்களே ஆன நிலையில் லஞ்சம் கொடுத்து பணியிடமாறுதல் பெற்றுள்ளாரா அல்லது முறைப்படி பணியிட மாறுதல் பெற்றுள்ளாரா என்பதை விசாரணை நடத்தி அவர் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமாறு கோரியுள்ளார்.

- பேரூராட்சி செயல் அலுவலர் பணியிடமாறுதலில் சென்றுள்ளது பணியமைப்பு சார்ந்த பொருள் என்பதால், இதில் இம்முறைமன்ற நடுவத்தினால் எவ்வித ஆணையும் பிறப்பித்திட இயலாது.
- கோம்பை பேரூராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் நியாயவிலைக் கடை அமைந்துள்ள இடம் பண்ணைபுரம் பேரூராட்சிக்குட்பட்ட பகுதியென்றும், மேலும் முட்புதர்கள் மற்றும் தண்ணீர் தேங்கியுள்ள இடம் கூட்டுறவு சொசைட்டிக்குச் சொந்தமான இடமென்றும் கோம்பை பேரூராட்சி செயல் அலுவலரது அறிக்கையின்படி தெளிவாகிறது.
- வடிகால் அமைந்துள்ள பகுதி பண்ணைப்புரம் பேரூராட்சிக்குட்பட்ட பகுதியாக இருந்தாலும், பொதுமக்கள் அதிகம் கூடுமிடமென்பதால் கோம்பை பேரூராட்சியால் கிருமி நாசினி மருந்துகள் தெளிக்கப்பட்டு, வடிகால் சுத்தம் செய்யப்படுவதாக தெரிவித்துள்ளார்.
- தேவேந்திர குல வேளாளர் முன்னேற்ற சங்கம் சர்வே எண்.3693/63ல் 1988லிருந்து சொத்துவரி மற்றும் மின்கட்டண வரி செலுத்திவரும் நிலையில், செயல் அலுவலர் லஞ்சம் பெற்றுக்கொண்டு அறிக்கை அனுப்பியுள்ளார் என மனுதாரரின் புகார் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. செயல் அலுவலரது அறிக்கை மற்றும் ஆவணங்களின்படி கோம்பை பேரூராட்சிக்குட்பட்ட புல எண்.3693/62ல் அரசுக்குச் சொந்தமான 0.03.06 ஹெக்டேர் விஸ்தீரணமுள்ள நத்தம் காலியிடம் திரு. ராஜு என்பவரால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதாக திரு. வேல்முருகன் என்பவரால் மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் தாக்கல் செய்யப்பட்ட W.P (MD) No.10504/2021ல் 24.6.2021ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பின் அடிப்படையிலும், தேனி மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.40070/2020/ஆ4 நாள் 5.2.2021ன் அடிப்படையிலும் மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கை மற்றும் நீதிமன்ற ஆணையை செயல் படுத்திடும் நோக்கிலும் வருவாய் கோட்டாட்சியர், உத்தமபாளையம் அவர்களுக்கு 20.10.2021ல் அனுப்பப்பட்டுள்ள அறிக்கை என்பது தெளிவாகிறது.

- எனவே, தேவேந்திரகுல வேளாளர் முன்னேற்றச் சங்க இடத்தில் டெங்கு பரவ நீர் தேங்கி உள்ள இடம் என்று வருவாய் கோட்டாட்சியர் அவர்களுக்கு செயல் அலுவலர் கையூட்டு பெற்றுக்கொண்டு அறிக்கை அனுப்பியுள்ளார் என மனுதாரர் தனது புகார் மனுவில் குறிப்பிட்டுள்ளது ஏற்கத்தக்கதல்ல. அதில் எவ்வித முகாந்திரமும் இல்லை

என்றும் நீதிமன்ற தீர்ப்பினையடுத்து மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கை என்றே இம்முறைமன்ற நடுவம் கருதுகிறது.

- நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்டுள்ள தீர்ப்பின் அடிப்படையில், அத்தீர்ப்பினை செயல்படுத்திட மேற்கொள்ளப்பட்டுள்ள மேல்நடவடிக்கைளில் இம்முறைமன்ற நடுவம் விசாரணை மேற்கொள்ளவோ ஆணை பிறப்பித்திடவோ இயலாது.

- எனவே, மனுதாரரால் குறிப்பிடப்பட்டுள்ள தேவேந்திர குல வேளாளர் முன்னேற்ற சங்க இடம் ஆக்கிரமிப்பு குறித்து நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் பேரூராட்சி நிர்வாகத்தினால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் பேரூராட்சி அலுவலர்கள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் குறித்து இம்முறைமன்ற நடுவம் விசாரணை செய்திட இயலாது.

- மேலும் மனுதாரரால் இம்முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள சொத்துவரி ரசீதில் செலுத்துபவரின் பெயருக்கெதிரே "தேவேந்திர குல ஜாதி பொது" என்று மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி சொத்திற்கான ஆதார ஆவணங்களோ, மேற்படி சொத்து குறித்து இம்முறைமன்ற நடுவத்தில் முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கை குறித்தோ ஏதும் தெளிவாக்கப்படவில்லை. மேலும் செயல் அலுவலர் திரு. சோமசுந்தரம் வருவாய் கோட்டாட்சியருக்கு அறிக்கை அனுப்பியுள்ள காலம் அக்டோபர் 2021 என்பதால், அப்போது வடகிழக்கு பருவமழைக்காலமென்பதால், தண்ணீர் தேங்கியிருந்திருக்கவும் வாய்ப்பிருந்திருக்கக்கூடும். எனவே முன்தைய செயல் அலுவலர் கையூட்டுப் பெற்றுக்கொண்டு பொய்யான அறிக்கையை அனுப்பியுள்ளதாக மனுதாரரால் முன்வைக்கப்பட்டுள்ள புகாரும் ஏற்புடையதல்ல என்றே இம்முறைமன்ற நடுவம் தீர்மானிக்கிறது
- மனுதாரரின் பொதுவான கோரிக்கைகள் குறித்து கோம்பை தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலரால் அளிக்கப்பட்டுள்ள அறிக்கை மற்றும் வாக்குமூலத்தின்படி கோம்பை பேரூராட்சிக்குட்பட்ட பகுதியில் நடவடிக்கைகள் முறையாக மேற்கொள்ளப்பட்டு, தீர்வு காணப்பட்டுள்ளது.

8. மேற்குறிப்பிடப்பட்டுள்ள சூழ்நிலையில், தேனி மாவட்டம், கோம்பை பேரூராட்சிக்குட்பட்ட பகுதியில் உள்ள தேவேந்திரகுல வேளாளர் முன்னேற்ற சங்கத் தலைவர் திரு. K. ஈஸ்வரன் என்பவரது புகார் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள பொது சுகாதார பிரச்சனைகள் கோம்பை பேரூராட்சி மற்றும் அதனையொட்டியுள்ள பண்ணைபுரம் பேரூராட்சியால் நிறைவேற்றப்பட்டுள்ளன. கோம்பை பேரூராட்சியின் முன்னாள் செயல் அலுவலர் திரு.சோமசுந்தரம் மீதான குற்றச்சாட்டுகள் ஆதாரமற்றவையெனவும், அவரால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் நீதிமன்றத்தினால் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ள செயல் என்பதும் ஆவணங்களின்படி நிரூபணமாவதால், மேற்படி குற்றச்சாட்டு இம்முறைமன்ற விசாரணைக்கு உகந்ததல்ல என்பதால் இப்புகார் மனு மீதான நடவடிக்கையினை இத்துடன் முடித்துவைத்து இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது. கோம்பை பேரூராட்சியின் முன்னாள் செயல் அலுவலர் திரு. சோமசுந்தரம் கையூட்டு பெற்றுக்கொண்டு அறிக்கை அனுப்பியுள்ளதாக

உரிய ஆதார ஆவணங்களின்றி இம்முறைமன்ற நடுவத்தில் மனுதாரர் புகார் மனு அளித்துள்ளதை இம்முறைமன்ற நடுவம் வன்மையாக கண்டிப்பதுடன், இனிவரும் காலங்களில் இதுபோன்று ஆதாரமில்லாமல் குற்றச்சாட்டுகளை அரசு பணியாளர்கள் மீது சுமத்துவதை தவிர்த்திடுமாறும் அறிவுறுத்துகிறது.

**2022**ஆம் ஆண்டு, ஏப்ரல் திங்கள் **27**ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒம்)/ x x x x x
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்
திரு. K. ஈஸ்வரன்,
தலைவர், தேவேந்திர குல வேளாளர் முன்னேற்ற சங்கம்,
மெயின் ரோடு, கோம்பை, தேனி மாவட்டம்–**625 522**
செயல் அலுவலர்,
கோம்பை தேர்வுநிலை பேரூராட்சி, கோம்பை, தேனி மாவட்டம்–**625 522**
பேரூராட்சிகளின் மண்டல உதவி இயக்குநர், தேனி மண்டலம், தேனி

பேரூராட்சிகளின் ஆணையாளர், பேரூராட்சிகளின் ஆணையரகம்,
நகர் நிர்வாக அலுவலகம், ராஜா அண்ணாமலைபுரம், எம்.ஆர்.சி நகர், சென்னை–**28**

இணை இயக்குநர் (பொது) மற்றும் ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
பேரூராட்சிகளின் ஆணையாளர் அலுவலகம், நகர் நிர்வாக அலுவலகம்,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை–**600 028.** (பெயரிடப்பட்ட உறையில்)
நகல்: மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்
இ.கோ/உதிரி

-/ஆணைப்படி/அனுப்பப்படுகிறது/–

செயலர்